# தமிழீழம் தொடர்பான தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பின் தீர்மானங்கள் – 2022

சென்னை 12.03.2022

**1) இலங்கை அரசு புரிந்த இன அழிப்புக்கான அரச பொறுப்பைப் பன்னாட்டு நீதிமன்றில் புலனாய்வு விசாரணைக்குள்ளாக்க இந்திய அரசைத் தமிழ்நாடு அரசு கோரவேண்டும்.** *ஈழத்தமிழர் தேசம் மீது சிங்களப் பேரினவாத இன அழிப்பு அரசான, சிறிலங்கா எனும் ஒற்றையாட்சி இலங்கை அரசு மேற்கொண்டுவரும் இன அழிப்புத் தொடர்பான அரச பொறுப்பு (State Responsibility on Genocide) குறித்துப் பன்னாட்டுப் பக்கஞ்சாரா புலனாய்வு விசாரணையைக் (international impartial investigations) கோரி, பன்னாட்டு நீதிமன்றில் (International Court of Justice, ICJ) இலங்கை அரசு மீது இந்திய அரசு வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்று தமிழ் உரிமை சார்ந்த கட்சிகளும், மக்கள் இயக்கங்களும் இணைந்து, தமிழ்நாடு அரசிடம் சட்டசபை ஊடாகத் தீர்மானம் இயற்றி இந்திய அரசை வலியுறுத்துமாறு கோருதல் வேண்டும்.*

**2) இலங்கை அரசினதும் படைகளதும் தலைவர்களையும் தளபதிகளையும் இன அழிப்புக் குற்றம் தொடர்பான பன்னாட்டுக் குற்றவியல் புலனாய்வுக்கு உட்படுத்துமாறு ஐ.நா. அவையின் பாதுகாப்புக் குழுவில் இந்தியா தீர்மானம் இயற்றுமாறு தமிழ்நாடு அரசு கோருவதோடு அதற்கான வரைபிலும் பங்கேற்கவேண்டும்.** *இலங்கை அரசின் குடிசார் மற்றும் அரச தலைவர்களும் (civil and political leaders) இராணுவத் தளபதிகளும் (military commanders) புரிந்துள்ள இன அழிப்புக் குற்றங்கள் தொடர்பான தனிநபர்க் குற்றவியற் பொறுப்புக்கூறல் (individual criminal responsibility) குறித்த பக்கஞ்சாரா, பன்னாட்டுப் புலனாய்வு ஒன்றை, ஐ.நா. மன்றின் ஊடாக இலங்கை தொடர்பான சிறப்புக் குற்றவியற் தீர்ப்பாயம் (International Criminal Tribuinal on Sri Lanka), ஒன்றை 1993 இல் யூகோஸ்லாவியா தொடர்பாகவும் (International Criminal Tribunal for the former Yugoslavia), 1994 இல் ருவாண்டா (International Criminal Tribunal on Rwanda) தொடர்பாகவும் அமைத்துப் பாரப்படுத்தியது போல, அமைக்க வேண்டும். இதற்கு ஏதுவாக, ஐ.நா. அவையின் பாதுகாப்புக் குழுவில் (UN Security Council) தீர்மானம் இயற்றுவதற்கு, இந்திய அரசு முன்மொழிவை மேற்கொள்ளவேண்டும். இந்த முன்மொழிவுக்கான வரைபை மறுப்பாணை (veto) வலுக் கொண்ட தனது நட்புநாடுகளின் துணையோடு இந்தியா தாக்கல் செய்ய வேண்டும். இதற்கான வரைபைத் தயாரிப்பதில் தமிழ்நாட்டு மாநில அரசின் பங்கேற்பு உறுதிசெய்யப்படவேண்டும். ஏதேனும் வல்லரசுகளால் இவ்வாறான வரைபு நிறைவேற்றப்படுவதற்கு எதிராக மறுப்பாணை பயன்படுத்தப்படலாம் எனும் அச்சம் இருந்தாலும், அது கண்டு பின்வாங்காது, வரைபை முன்வைத்து எந்தெந்த வல்லரசுகள் மறுப்பாணையைப் பயன்படுத்திக் குறித்த நகர்வைத் தடுக்கின்றன என்பதையாவது ஐ.நா. அவையின் பாதுகாப்புக் குழுவில் நிறுவிட இந்தியா முன்வரவேண்டும்.*

**3) இலங்கை அரசு புரிந்துவரும் இன அழிப்புக் குற்றங்கள், 2002 இல் இருந்து மட்டுமல்ல, பன்னாட்டுச் சட்ட அடிப்படையில், 1951 இல் இருந்தே நீதிப் புலனாய்வு விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்.** *1950 அக்டோபர் 02 ஆம் நாள் இலங்கை அரசு இசைவளித்து (ratification), 1951 சனவரி 12 ஆம் நாள் தொடக்கம் சட்டநியாயாதிக்க நடைமுறைக்கு வந்துள்ள (entered into force) இன அழிப்புக் குற்றத்தை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான கட்டளை உடன்படிக்கை (Convention on the Prevention and Punishment of the Crime of Genocide, also known as the Genocide Convention) அடிப்படையில், 1951 ஆம் ஆண்டில் இருந்து வழக்குத் தொடுக்கப்படும் காலம் வரை, இலங்கை அரசு மேற்கொண்டுவந்துள்ள இன*



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274
Email ; maanavarkoottmaippu@gmail.com

அழிப்புக் குற்றங்கள் முழுமையாக விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டும். அரசபொறுப்புக்கும் தனிநபர்க் குற்றவியற் பொறுப்புக்குமான புலனாய்வுகளை மேற்கொள்வதற்கான தீர்மானங்களும் (Resolutions), அவற்றூடாகப் பெறப்படும் ஆணைகளும் (Mandates), அந்த ஆணைகளின் பாற்படும் ஆய்வெல்லைகளும் (Terms of Reference) இன அழிப்புக் கட்டளை உடன்படிக்கையில் இருந்தே ஊற்றெடுக்கவேண்டும். அவ்வாறான சிறப்புக் குற்றவியற் தீர்ப்பாயம் ஒன்று அமையும் போது, அரசுகளின் ஒப்பந்தங்கள் சார்ந்த பன்னாட்டுச் சட்டங்கள் (treaty-based international laws) மற்றும், முன்னைநாள் யூகோஸ்லாவியா, ருவாண்டா ஆகிய நாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையிலான வழமைச் சட்டங்கள் சார்ந்தும் (customary international law), குடிசார் அரசியற் தலைவர்களையும் இராணுவத் தளபதிகளுக்குச் சமதையாகக் குற்றவியற் பொறுப்பில் கையாளும் வகையிலும், பாலியல் வன்புணர்வுக் குற்றங்களையும் இன அழிப்புக்கான குற்றங்களாகக் கருதலாம் என்று ஏற்கனவே கொடுக்கப்பட்ட முன்மாதிரிப் தீர்ப்புகளையும் அடிப்படையாகக் கொள்ளும் சர்வதேச வழமைச் சட்டநடைமுறைகளின் பிரகாரமும் விசாரணையின் ஆய்வெல்லை வரையறுக்கப்படவேண்டும்.

**4) இலங்கை அரசு புரிந்துவரும் பண்பாட்டு, மரபியல் இன அழிப்பும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பும் பன்னாட்டு நீதிப் புலனாய்வில் இன அழிப்புக் குற்றமாகப் பார்க்கப்படும் முன்மாதிரியை உருவாக்குதல் வேண்டும்.** 1948 இல் இயற்றப்பட்டுள்ள சர்வதேச இன அழிப்புச் சாசனத்துக்கும், சட்டங்களுக்கும், அதன் பின்னான இன அழிப்புத் தொடர்பான சட்டகங்களுக்கும் வழமைச் சட்டத் தீர்ப்புகளுக்கும் அப்பாற் சென்று, இலங்கைத் தீவு தொடர்பான விடயத்தில் பண்பாட்டு மற்றும் மரபியல் இன அழிப்பும் (cultural and heritigate genocide), கட்டமைக்கப்பட்ட இன அழிப்பும் (structural genocide) புதிய முன்மாதிரிகளாக எடுத்தாளப்பட்டு (setting a precedent) விசாரணையின் தீர்ப்பு அமையும் வகையில் உலகளாவிய தமிழர்கள் கடமையாற்ற வேண்டும். இதன் மூலம் உலகில் வேறெங்கும் இதுபோல நுட்பமான இன அழிப்புக்கு எந்த சக்திகளும் ஒரு தேசத்தையோ, மக்களையோ, பாதுகாக்கப்படவேண்டிய குழுக்களையோ உட்படுத்தாதும் அதற்கு உடந்தையாகதவாறும் தடுப்பதற்கான முன்மாதிரியை நிறுவி உலக மானுடத்தின் எதிர்கால நீதிக்கும் வலுச்சேர்க்கலாம். இதன் முக்கியத்துவத்தை, இந்திய அரசுக்கும் சர்வதேச நீதித் தரப்புகளுக்கும் தமிழ்நாடு மாநில அரசு சர்வதேசச் சட்ட அடிப்படையில் எடுத்தியம்பவேண்டும்.

**5) ஈழத்தமிழர் தேசமும் ஏனைய தமிழ்பேசும் மக்களும் எதிர்காலத்தில் இன அழிப்புக் குற்றங்களுக்கு உட்படுத்தப்படாது பாதுகாக்கும் பொறுப்பில் முன்போல இனியும் இந்தியா தவறவிடாது செயலாற்றவேண்டும் என்று தமிழ்நாடு மக்கள் தீர்ப்பாயம் முதல் சட்ட நகர்வு வரையான வாய்ப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அடுத்த கட்ட நடவழக்கையை மேற்கொள்ளவேண்டும்.** ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் தமிழ்பேசும் மக்கள் மீண்டும் இனப்படுகொலைத் (ethnic pogrom) தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படும் ஆபத்தான நிலவரம் இலங்கைத் தீவில் நிலவுகிறது. போருக்கு முன்னர், அமைதிவழிப் போராட்டங்கள் மூலம் தமது உரிமைகளைக்காக அணிதிரண்டபோது பலமுறை இனப்படுகொலைத் தாக்குதல்களை ஈழத்தமிழர்கள் எதிர்கொண்டார்கள். அதே நிலைமை மீண்டும் கடும்போக்கு ஒற்றையாட்சி அரசியலமைப்பை இலங்கை அரசு முன்வைக்கவுள்ள இந்த வருடம், குறிப்பாக அதற்கு எதிர்ப்புக் கிளம்பும் போது மீள்நிகழும் (recurrence) ஆபத்து இருக்கிறது. இவ்வாறான இன அழிப்பைத் தடுக்கும் பொறுப்பு (Obligation to Prevent Genocide) சர்வதேசச் சட்டத்தின் பிரகாரம், இந்திய அரசு இலங்கைக்கு அருகிலிருக்கும் நாடு என்றவகையிலும் அதற்குள்ள கடமை சார் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பில் இருந்து இந்திய அரசு மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டு அரசினதும் மக்கள் சமூகத்தினதும் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்காது தட்டிக்கழித்துத் தவறி வந்துள்ளது. குறிப்பாக, இலங்கை அரசு பாதுகாப்பு வலயம் (Safe Zones) என்று அறிவித்த இடங்கள் மீது தாக்குதல் நடாத்தியபோது அங்கு நடைபெற்ற போர் இன அழிப்புப் போராக மாறிவிட்டது என்பதை இந்திய அரசு நன்கு அறிந்திருக்கவேண்டும். இருந்தும் அதைத் தடுப்பதற்கான அரச பொறுப்பிலிருந்து அது தவறிவிட்டது. இந்த வகையில், இந்திய ஒன்றிய அரசுக்குள்ள மீறவொண்ணா வழமை (jus cogens norm) அடிப்படையில் சர்வதேசச் சட்ட ரீதியாக இருக்கும் தட்டிக்கழிக்கவியலாப் பொறுப்பு இருக்கிறது. இந்தப் பொறுப்பை இந்தியா சரிவர ஆற்றாவில்லை என்பது குறித்த நீதிவிசாரணையைக் கூட தமிழ்நாட்டு அரசு கோரலாம். மீண்டும் இலங்கைத் தீவில் இனப்படு



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274
Email ; maanavarkoottmaippu@gmail.com

கொலைத் தாக்குதல்கள் நிகழும் ஆபத்து இருப்பதால், உடனடியாக இந்தியாவின் இந்தப் பொறுப்புப் பற்றிய ஆய்வுகளையோ, மக்கள் தீர்ப்பாயங்களையோ முன்னெடுத்து, சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பிருந்தால் அதற்கான உரிய நீதி நடவடிக்கையைத் தமிழ்நாட்டு அரசு முன்னெடுக்கவேண்டும்.

**6) ஈழத்தமிழர் தேசத்தினது இறைமையும் இதர தமிழ்பேசும் மக்களோடு வடக்கு கிழக்கைப் பாரம்பரியத் தாயகமாகக் கொள்வதற்கு அவர்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையும் இந்தியாவால் அங்கீகரிக்கப்பட தமிழ்நாடு அரசு ஆவன செய்தல் வேண்டும்.** இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கைப் பாரம்பரிய தாயகமாகக் கொண்ட ஈழத்தமிழர் ஒரு மக்கள் (people) மட்டுமல்ல, அவர்கள் ஒரு தேசமும் (nation) ஆவர். இத் தாயகத் தேசம் தமிழீழம் ஆகும். தற்போது அது ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட தேசம். அங்கு வாழும் இதர தமிழ் பேசும் மக்கள் தனித்துவமான மக்கள். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கின்றி 1948 இற்கு முன்பிருந்தே ஈழத்தமிழர்களோடும் இதர தமிழ் பேசும் மக்களோடும் ஒப்புரவோடு வாழும் சிங்கள மொழிபேசுவோர் அங்கு சிறுபான்மையினராவர். ஆனால், சிங்கள மயமாக்க நோக்கோடு குடியேற்றப்பட்ட சிங்களவர்களும் அவர்தம் வழித்தோன்றலும் தமிழ்த் தேசத்தின் குடியுரிமைக்கோ, வாக்குரிமைக்கு உள்ளடக்கப்படல் ஆகாது. 1948 இற்குப் பின்னர் தமிழர் தாயகத்தின் இனப்பரம்புகையை மாற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துச் சிங்களக் குடியேற்றங்களும் சட்டபூர்வமற்றவை. ஈழத்தமிழர்களதும், தமிழ்பேசும் மக்களும் ஏனைய சிறுபான்மையினரும் சேர்ந்துவாழும் பிரிக்கப்படக்கூடாத ஒன்றிணைந்த பாரம்பரியத் தாயகமான தமிழீழம் என்பதை இந்திய ஒன்றிய அரசு அங்கீகரிக்குமாறு தமிழ்நாட்டு அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும். அதைப்போலவே, வடக்கு கிழக்கு மலையகத் தமிழர்களுக்கும் உரித்துடையதாக ஈழத்தமிழர்களின் தாயகக் கோட்பாடு அமைகிறது. உலகெங்கும் புலம்பெயர்ந்திருக்கும் ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களும் அவர்தம் வழித்தோன்றல்களும் தமது பாரம்பரியத் தாயகமாகத் தமிழீழத்தை வரித்துக் கொள்ள உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீகரிக்கவேண்டும். தேசமாகவும், மக்களாகவும் சுயநிர்ணய உரிமை கொண்ட மக்களைக் கொண்டது தமிழீழத் தாயகம். இதற்கான மக்கள் ஆணை 1977 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இதற்காக அளப்பரிய தற்கொடைகளை மேற்கொண்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்ற வகையிலும், அவ்வாறான போராட்டம் இன அழிப்புப் போரின் மூலம் அழிக்கப்பட்டதென்பதாலும், தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பு ஐ.நா. மேற்பார்வையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஏற்கனவே ஏகமனதாகத் தமிழ்நாட்டின் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் கோரிக்கையைத் தமிழ்நாட்டு அரசு மீள் உறுதிப்படுத்தி, ஈழத்தமிழர்களது தேசிய சுயநிர்ணய உரிமையை இந்திய ஒன்றிய அரசு அங்கீகரிக்குமாறு, நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் அப்பால், தெளிவாக மீள்வலியுறுத்திக் கோரிக்கையை முன்வைக்கவேண்டும்.

**7) ஈழத்தில் தமிழின் தொன்மை சிங்களத்தின் தோற்றத்துக்கும் முற்பட்டது என்பதை இந்தியா அங்கீகரிக்கத் தமிழ்நாடு ஆவன செய்தல் வேண்டும்.** ஈழத்தமிழர் தேசத்தின் தொன்மையும் இறைமையையும் சிங்கள தேசத் துக்கும் முற்பட்டது என்பதைத் தமிழ்நாட்டு அரசும் இந்திய ஒன்றிய அரசும் அங்கீகரிக்கவேண்டும். இலங்கைத் தீவில், ஈழத்தமிழர்கள் பூர்வீகக்குடிகள் ஆவர். தமிழ் நாகரிகத்தின் வரலாற்றுத் தொட்டிலான தமிழ்கூறு நல்லுலகில் மூவேந்தர் ஆண்ட தமிழகத்தைப் போல ஈழமும் தனித்துவமானது. தொன்மைதொட்டு, சிங்களம் என்ற அடையாளத்தின் உருவாக்கத்திற்கு முன்பிருந்தே சங்க இலக்கியப் புலவர்களுள் அடையாளம் காட்டப்படுமளவுக்கு வாழ்ந்துவந்தவர்கள் என்ற அடிப்படையிலும், தமிழ்நாட்டின் தொல்லியற் சான்றுகளுக்கு ஒப்பான சான்றுகளைக் கொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையிலும் அவர்கள் அத் தீவில் தனித்துவமான இறைமைக்கு உரித்துடையவர்கள். ஈழத்தமிழர் தேசத்தின் இறைமை உரித்தைத் தமிழ் நாட்டு மாநில அரசு முறைப்படி அங்கீகரித்து, இந்திய நடுவண் அரசையும் அதை முறைப்படி அங்கீகரிக்குமாறு கோரவேண்டும். சங்ககாலத் தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனாரை ஐ.நா. வில் எடுத்துரைத்த இந்தியப் பிரதமருக்கு அந்த நாகரிகத் தொட்டிலின் சகோதர உறவுகளான ஈழத்தமிழர்களின் பூர்வீகம் தொடர்பாகவும் நினைவுபடுத்தவேண்டிய பொறுப்பு தமிழ் நாட்டுக்கு உள்ளது.

**8) ஒற்றையாட்சிக்குள் அரசியற்தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியாக எதையும் கொள்ள முடியாது என்று தமிழ்நாடு தனது நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும்.** இலங்கை ஒற்றையாட்சிக்குள் 13 ஆம் சட்டத்திருத்தம் போன்றவற்றால் உருவாக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு ஒழுங்குகளையும், அவைக்கு அர்த்தம்



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274
Email ; maanavarkoottmaippu@gmail.com

இருக்கிறதா இல்லையா என்பதற்கு அப்பாற்பட்டு, இலங்கை அரசு நீக்குவதை எதிர்க்கின்ற அதேவேளை, இவ்வாறான சட்டத்திருத்தங்கள் ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் ஒட்டுமொத்தமாக தந்தை செல்வாவின் காலத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்படாத ஒற்றையாட்சிக்குள் அர்த்தமற்ற அதிகாரப்பரவலாக்கத்துக்குரிய தீர்வு களாகவே முன்வைக்கப்பட்டிருப்பதால், அவற்றை ஒருபோதும் அர்த்தமுள்ள அதிகாரப்பங்கீடு நோக்கிய தீர்வுகளுக்கான ஆரம்பப்புள்ளியாகக் கூடப் பார்க்க முடியாத, எவராலும் ஒருபோதும் அசைக்கப்பட முடியாத, தளர்த்தப்படமுடியாத தமிழ்நாட்டு நிலைப்பாடாக இருக்கவேண்டும். ஈழத்தமிழர் தேசத்தின் அரசியல் அபிலா சைக்குரிய (political aspiration) இறுதி மக்களாணை பற்றியதான, எந்தவித குறைப்புக்கும் இடமளிக்காத தனிநாடு அமைக்கும் முழுமையான சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட தீர்வை மட்டுமே ஆரம்பப் புள்ளியாகவும், இடைக் கால நிலையாகவும், இறுதித் தீர்வுக்கான வடிவமாகவும் தமிழ்நாடு சட்ட நியாயாதிக்க ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும், மேற்கொள்ளப்பட்ட அளப்பரிய தற்கொடைகளின் கனதியோடும் அணுகவேண்டும். ஆகவே, தற்போதைய ஆக்கிரமிக்கப்பட்ட ஈழத்தமிழர் தாயகத்திலிருந்து, ஆறாம் சட்டத்திற்கு விசுவாசமாக உறுதி எடுத்துள்ள எவரும் தமிழ்நாட்டுத் தலைமைகளை அணுகித் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள சட்டசபைத் தீர்மானங் களின் வீச்சுக்குக் குறைந்த ஒரு நிலைப்பாட்டுக்கு ஆதரவு கோருவதற்கு முனையக்கூடாது. அவ்வாறு முனைப வர்களுக்கு அரச மட்டச் சந்திப்புகள் வழங்கப்படக்கூடாது. அது மட்டுமல்ல, அந்த நோக்கில் தமிழ்நாட்டுக்கு வருகை தரும் எவரும் தமிழ்நாட்டு மாணவர் சமூகத்தின் கடும் எதிர்ப்புக்கு ஆளாகநேரிடும் என்றும் இத்தீர் மானத்தின் மூலம் எச்சரிக்கின்றோம்.

**௧) இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் உறுப்புரைகள் ஈழத்தமிழர் தாயகக் கோட்பாட்டை ஆதரிக் கவில்லை, மாறாகச் சிதைக்கின்றன. அவ்வாறான உறுப்புரைகளை மீளவும் நியாயப்படுத் தாது, தாயகக் கோட்பாட்டை ஆதரித்து, ஒற்றையாட்சியைத் திட்டவட்டமாக மறுத்துரைக்குமாறு இந்திய ஒன்றிய அரசைத் தமிழ்நாடு அரசு கோரவேண்டும்.** 1987 இந்திய-இலங்கை அரச தலைவர் களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒரு சர்வதேச ஒப்பந்தம் என்றும் அது தற்போதும் நடைமுறை யில் இருப்பதாகவும் சிலர் சொல்லிவருகிறார்கள். இதனால், பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. இந்த ஒப்பந்தம் ஒற்றையாட்சி முறையை மறுதலிக்காது அங்கீகரிக்கிறது. இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு முரணாக அமையாதவாறு, சிங்களம் இலங்கையின் ஆட்சிமொழி என்று முதன்மைப்படுத்தி எழுதி, அதற்குப் பின்னர், இன்னொரு வசனமாகத் தமிழும் ஆங்கிலமும் ஆட்சிமொழிகளாக விளங்கும் என்று குறிப்பிடுவது இரண்டாந்தர நிலையையே ஈழத்தமிழர்களுக்குத் தருகிறது. இதற்கு ஒப்பாகவே, இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் உறுப்புரை 2.18 பின்வருமாறு கூறுகிறது: *The official language of Sri Lanka shall be Sinhala. Tamil and English will also be official languages.* இதைப்போலவே, கிழக்கில் மட்டும் பொதுவாக்கெடுப்பு மேற்கொண்டு வடக்கோடு இணையலாம் என்ற நிலைப்பாட்டைத் தனது உறுப்புரை 2.3 இல் முன்வைத்துள்ளது. இது வரலாற்று ரீதியான தமிழர் தாயகக் கோட்பாட்டையும், பிரித்தானியரால் வடக்கு கிழக்காகப் பிரிக்கப்பட்ட அதன் ஆட்சிப்புலம் சார் ஒருமைப்பாட்டையும் நிராகரிக்கிறது. அதுமட்டுமல்ல, முகவுரை உறுப்புரை 1.4 இல், ஈழத்தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை நுட்பமாக மறுதலிக்கிறது. அதாவது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழிடங்களாக ஏனைய மக்களோடு இருந்துவந்துள்ள பிரதேசம் என்று பின்வருமாறு குறிப்பிடுகிறது: *Also recognising that the Northern and the Eastern Provinces have been areas of historical habitation of Sri Lankan Tamil speaking peoples, who have at all times hitherto lived together in this territory with other ethnic groups.* அதுமட்டுமல்ல, தற்காலிக இணைப்பை மேற்கொண்டு, 31 டிசம்பர் 1988 இற்கு முன்னதாக பொதுவாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவு மேற்கொள்ளப்படவேண்டும் என்று உறுப்புரை 2.3 குறிப்பிடுகிறது. ஈழத்தமிழர்களின் தாயகக் கோட் பாட்டை நிராகரிக்கும் இந்த ஒப்பந்தம் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான ஒரு நியாயமான தீர்வை முன்வைக் கவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் 1987 இலேயே நிராகரித்திருந் தார்கள். எனவே, இந்த ஒப்பந்தத்தை இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழர் கோரிக்கைகளை மட்டுப்படுத்தச் சில தரப்புகள் முனைகின்றன. ஆனால், இது தவறானது. அதுமட்டுமல்ல, இலங்கையோ, இந்தி யாவோ, இந்த ஒப்பந்தம் தற்போதும் நடைமுறையில் இருப்பதாக எங்கும் தெரிவிக்கவில்லை. இவ்வாறான ஒரு சூழலில், முறையான ஓர் அணுகுமுறையை வகுக்கவேண்டிய தேவை எம் அனைவருக்கும் உண்டு. இதனால், இலங்கைத் தீவில் ஒற்றையாட்சி முறை பொருத்தமற்றது என்ற நிலைப்பாட்டை இந்தியா பகிரங்கமாக அறி விக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கோரவேண்டும்.



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274
Email ; maanavarkoottmaippu@gmail.com

**10) இன அழிப்புச் சாட்சியங்களைப் பதிவதற்குத் தமிழ்நாடு மாநில அரசு உடனடிச் செயல்முறையை நடைமுறைப்படுத்தவேண்டும்.** *ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் உருவாக்கப்பட்டுள்ள 46/1 தீர்மானத்துக்கு உட்பட்ட பொறிமுறைக்குள், இன அழிப்புத் தொடர்பான சாட்சியங்களை எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் திரட்டிக் கையளிக்க தமிழ்நாட்டின் அனைத்து ஈழ ஆதரவுச் சக்திகளும் அணிதிரண்டு செயலாற்ற முன்வரவேண்டும். அதுபோல, தமிழ்நாட்டு மாநில அரச மட்டத்திலும் இதற்கேற்ற ஒழுங்குகள் விரைவாகச் செய்துகொடுக்கப்படவேண்டும்.*

**11) ஐ.நா. மனித உரிமை உயர் ஆணையர் இன அழிப்பை ஆராய உத்தரவிடவேண்டும் என்றும் ஈழத்தமிழர்களைச் சிறுபான்மையாகச் சித்தரிப்பதை நிறுத்தவேண்டும் என்றும் கோரும் சட்டசபைத் தீர்மானங்களை இந்திய அரசு ஊடாக ஐ.நா. நோக்கி, ஏற்கனவே தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மீள வலியுறுத்தியும், அவற்றுக்கு மேலதிகமான நியாயப்பாடுகளை எடுத்துரைத்தும், விரைவாக நிறைவேற்றவேண்டும்.** *ஈழத்தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட இன அழிப்பைப் பற்றி இதுவரை ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆராயாமற் தவிர்த்து வந்துள்ளது. 2015 இல் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்திய அலுவலகப் புலனாய்வு விசாரணையின் அறிக்கையை வெளியிட்டபோது இதைப் பற்றிய கேள்வி ஐ.நா.மனித உரிமை உயர் ஆணையாளரிடம் முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், அவ்வாறான ஒரு விசாரணையைத் தாம் செய்யவில்லை என்றும் இன அழிப்புக் குற்றத்தைத் தாம் புலனாய்வுக்கு உட்படுத்தவில்லை என்றும் ஒத்துக்கொண்டதோடு, எதிர்காலத்தில் அதற்கான சாட்சியங்களுடனான புலனாய்வு விசாரணை நடாத்தப்படலாம் என்பதையும் மறுத்துரைக்கவில்லை. ஏழு வருடங்கள் எதுவித முன்னேற்றமும் இன்றி ஓடிக்கழிந்துவிட்ட தற்போதைய சூழலில், மியான்மாருக்கு 2017 மார்ச்சில் அமைக்கப்பட்டதைப் போல இன அழிப்புக் குற்றத்தைப் பற்றி ஆராய்வதற்கான ஆணையோடு உருவாக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறியும் பணிக்குழு (Independent International Fact-Finding Mission on Myanmar) ஒன்றையோ, அல்லது உக்ரேன் மீது ரஸ்யா மேற்கொண்டுள்ள இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்பாக 2022 மாரச்சில் அமைக்கப்பட்டது போன்ற புலனாய்வு விசாரணைக்கான ஆய்வகம் (Commission of Inquiry) ஒன்றையோ நியமிக்கவேண்டும், அல்லது அவ்வாறு செய்யுமாறு உரிய ஐ.நா. பொறிமுறையிடம் கோரவேண்டும். இதனைத் தமிழ்நாட்டு அரசு இந்திய ஒன்றிய அரசின் ஊடாகவும், தனிவேறாக வேறு வழிகளிலும் ஐ.நா. மனித உரிமை உயர் ஆணையருக்கும், அவரது அலுவலகத்திற்கும், பேரவையில் தீர்மானமியற்றும் மைய நாடுகளின் குழுமத்திற்கும் (Core Group on Sri Lanka), அல்லது அதற்கு மாற்றான ஓர் அணியிடமும் அதற்கான நியாயப்பாடுகளை எடுத்துரைத்து முன்வைக்கவேண்டும். ஏற்கனவே முன்னைய தமிழக முதல்வர் அமரர் செல்வி ஜெயலலிதா அவர்களால், அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு 2011 ஜூன் மாதத்தில் பொருளாதாரத் தடையைக் கோரி முதலாவதாகவும், பின்னர் 2013 மார்ச் மாதம் கொண்டுவரப்பட்ட சட்டசபைத் தீர்மானத்தில், மேலும் விபரமாக, இந்தியா இலங்கையை நட்பு நாடு என்று அழைப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும், இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச புலன் விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்றும், ஈழத்தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு 'தனி ஈழம்' குறித்து பொதுவாக்கெடுப்பு நடாத்த ஐ.நா. அவையின் பாதுகாப்புக்குழுவில் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது. அதேவருடம் அக்டோபரில் கொண்டுவந்த தீர்மானத்தில் பொதுநலவாயக் கூட்டமைப்பில் இருந்து இலங்கையைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை இந்தியப் பேரரசு மேற்கொள்ளவேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இலங்கையின் வடக்கு மாகாண சபையில் இன அழிப்புக்கான சர்வதேசப் புலன் விசாரணை கோரிய தீர்மானம் 2015 பெப்ரவரியில் நிறைவேற்றப்பட்ட பின்னர், அதை மேற்கோள் காட்டியும் அதேவேளை, அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலையை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் மேற்கொண்டால் அதனை மாற்ற இந்தியா ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் 2015 செப்டம்பரில் சட்டசபைத் தீர்மானம் ஒன்றை அனைத்து கட்சிகளின் ஆதரவோடு நிறைவேற்றியிருந்தார். அவ்வாறான தீர்மானங்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவையாகக் கருதப்படும் நிலைப்பாடுகள் எதற்கும் இடமளிக்காது, அவற்றைவிடவும் கூடுதல் நியாயப்பாடுகளோடு இனி வரும் சட்டமன்றத் தீர்மானங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அதுமட்டுமல்ல, தொடர்ச்சியாக நடைபெறும் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இன அழிப்புக்கான பொறுப்புக்கூறலை ஈழத்தமிழர் பிரதிநிதிகள்*



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274

Email ; maanavarkoottmaippu@gmail.com

வலியுறுத்தியபோதும் அதைக் கண்டுகொள்ளாது தற்போதைய இலங்கைத் தீவு பூராவுக்குமான மனித உரிமை மீறல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொறிமுறையாக அதை மடைமாற்றம் செய்து வருவது கண்டிக்கத் தக்கது. குறிப்பாக, ஈழத்தமிழர்களுடைய தேசிய, மற்றும் மக்கள் சார்ந்த கூட்டு உரிமைகளைப் பற்றி ஆராயாது, அவர்களை வெறும் இனக்குழு (ethnic minority) அல்லது மதக் குழுச் சிறுபான்மை (religious minority) போல மனித உரிமை உயர் ஆணையரும், அவரது அலுவலகமும், பேரவையின் பல உறுப்பு நாடுகளும் சித்தரித்துவருவது கண்டிக்கத்தக்கது.

**12) ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழத்தின் மீதான சிங்களப் பேரினவாத அடக்குமுறையும் இராணுவ ஆக்கிரமிப்பும் நிறுத்தப்படும் வரை, தமிழ்நாடு பொருளாதாரத் தடைகளை மேற்கொள்வதோடு இன அழிப்பை எதிர்க்காத இலங்கைத் தீவைச் சேர்ந்த எவரோடும் அரச மற்றும் சமூக மட்ட உறவுகளை மேற்கொள்ளாது முழுமையாக அவர்களைப் புறக்கணிக்க வேண்டும்.** பாலஸ்தீன மக்கள் வாழும் தேசம் எவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனம் (Occupied Palestine) என்றவாறு குறிப்பிடப் படுகிறதோ, அதைப்போலவே ஈழத்தமிழர்களும் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழம் எனக் குறிப்பிடப்படவேண்டும். அதுமட்டுமல்ல, ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழத்தில் இருந்து சிங்களப் பேரினவாத இராணுவம் விலக்கிக்கொள்ளப்படும் வரை இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடைகள் மக்கள் மட்டத்திலும் தமிழ்நாட்டு அரச மட்டத்திலும் Boycott, Divestment, Sanctions (BDS) movement இற்கு ஒப்பாக உருவாக்கப்பட்டு உடனடியாகத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் எந்த ஒரு குடிமகனோ, நிறுவனமோ, அல்லது அமைப்போ, தென்னிலங்கையிலோ, இலங்கை அரசு மூலமாகவோ அல்லது அதற்கு அப்பாற்பட்டோ நேரடி முதலீடுகளில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடுவோர் தமிழினத்துக்கெதிரான இரண்டகர்களாகவே பார்க்கப்படவேண்டும் என்று இந்த மாநாடு எச்சரிக்கிறது. மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தியப் பிரதமருக்கு வரைந்த கடிதங்களில் இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் எங்கேனும் பயிற்சிகள் வழங்கப்படக்கூடாது என்றும் சிங்கள விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளக்கூடாது என்றும் கோரியிருந்தார். அதைப்போல, சிங்களப் பேரினவாத அரசை எதிர்க்காத, இன அழிப்புக்கான சர்வதேச நீதியைக் கோராத எந்தவொரு இலங்கை அரசின் குடியுரிமை பெற்ற தனிநபருடனோ, இலங்கை நிறுவனங்களுடனோ தமிழ்நாடு விளையாட்டு, திரை, கலைத்துறை மற்றும் மதரீதியான உறவுகள் உள்ளடங்கலான எந்தவொரு உறவுகளையும் பேணாது புறக்கணிக்கவேண்டும் என்றும் இம் மாநாடு கோருகிறது.

**13) ஈழத்தில் மாணவ சமூகம் முன்னெடுக்கவேண்டிய ஜனநாயகப் போராட்டங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு அப்போராட்டங்களுக்கான ஆதரவை தமிழ்நாடு மாணவ சமூகம் வழங்கி உறுதி சேர்க்க அணிதிரளவேண்டும்.** ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஈழத்து மாணவர்கள் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு எதிராக முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு எமது ஆதரவை வழங்குகிறோம். அதேவேளை, நினைவேந்தல் மறுப்புக்கு எதிராகவும், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான நீதிக்கும், அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும், இலங்கை ஒற்றையாட்சித் திணிப்புக்கு எதிராகவும், இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், சிங்களத் தீவிரவாத தேரவாத பௌத்தத் துறவிகளும் இலங்கையின் தொல்லியல் திணைக்களமும் இணைந்து முன்னெடுக்கும் பண்பாட்டு இன அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராகவும், அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் ஆட்சிப்புலத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், பேரினவாத இராணுவம், காவல்துறை மற்றும் நீதித்துறையின் முண்டுகொடுப்புகளோடு நடைபெறும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் குரல்கொடுக்கும் ஈழத்து மாணவர் போராட்டங்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வீச்சாக முன்னெடுக்கப்படவேண்டும் என்றும், ஈழத்து மாணவர் போராட்டங்களுக்குப் பலம் சேர்க்கும் வகையில் தமிழ்நாட்டில் மாணவர் எழுச்சிகள் இடம் பெறவேண்டும் என்றும் இம் மாநாடு வேண்டிக்கொள்கிறது.



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274
Email ; maanavarkoottmaippu@gmail.com

**14) ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஈழத்திலிருந்தும் பன்னாட்டு நீதிக்கான நியாயப்பாடுகளை பலப் படுத்தும் வகையில் ஜனநாயக எழுச்சிகள் தேர்தல் அரசியற் கட்சிகளின் போராட்டங்களுக்கும் அப்பால் குடிசார் சமூக மற்றும் அடிமட்ட மக்கள் மட்டத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.** *ஆக்கி ரமிப்புக்கு உட்பட்டிருந்தாலும் துணிவோடு நினைவேந்தல் தொடக்கம் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட் டங்கள் வரை ஈழத்து மக்கள் தொடர்ச்சியாக அணிதிரண்டு வருகிறார்கள். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டங்கள் உணர்ச்சிபூர்வமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எதிர்வரும் மாதங்களில் இவ்வாறான மக்கள் எழுச்சிகள் ஒட்டுமொத்த இன அழிப்பு நீதிக்கான போராட்டங்களாக மேலும் சிறப்பாகவும் ஒன்றிணைந்தும் தேர்தல் அரசியற் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் மக்கள் தளத்தில் முன்னெடுக்கப்படுவது சர்வதேச நீதிக்கான தமிழ்நாடு மற்றும் உலகளாவிய நகர்வுகளுக்கு மேலும் வலுவூட்டும் என்று தமிழ்நாட்டு மாணவர் சமூகம் கருதுகிறது.*

**15) புலம்பெயர் தமிழ் மாணவர் சமூகமும் இளையோர் அமைப்புகளும் பன்னாட்டு நீதிக்கான நியாயப்பாடுகளை எடுத்துரைக்கும் நடவடிக்கைகளை மீண்டும் விரைந்து முன்னெடுக்க வேண்டும்.** *புலம்பெயர் நாடுகளில் குறிப்பாக கனடா அரசையும், பிரித்தானிய அரசையும், ஐரோப்பிய ஒன்றி யத்தையும், நோர்வே போன்ற சமாதான முயற்சி மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபட்ட வடதுருவ நாடுகளையும் நோக்கி, ஒவ்வொரு சக்திகளுக்கும் உள்ள பொறுப்புக்கூறலை அல்லது அவற்றின் கடப்பாட்டை நினைவுபடுத்தி அவை ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான, தனித்துவமான கோரிக்கைகளை முன்வைக்கவேண்டிய பொறுப்பு சர்வதேசச் சட்டங்கள், உரிமைகள், மற்றும் ஈழப்போராட்ட வரலாறு பற்றிய அறிவுசார்ந்து சிந்திக்க வல்ல புலம்பெயர் ஈழத்தமிழ் மாணவர்களுக்கும் இளையோர் அமைப்புகளுக்கும் முக்கியமாக உள்ளது என்பதை நினைவுபடுத்தி, வெறுமனே சமூகவலைத்தள இடுகைகளின் மூலம் மட்டும் செயற்பாட்டை வெளிப்படுத்தாமல், காத்திரமான மக்கள் இயக்கங்களாக அவர்களது நடவடிக்கைகள் பரிணாம வளர்ச்சி காண வேண்டும் என்று இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது. ஏற்கனவே இயங்கிவரும் புலம்பெயர் அமைப்புகளும் தம்மை மறுசீரமைத்து, 2009 இற்குப் பின்னான தமது நடவடிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்தி, தமது செயற்பாடுகளை அறிவியல் ரீதியாக மேம்படுத்திச் செயற்பட முன்வரவேண்டும் என்றும் இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.*

**16) தேர்தல் அரசியற் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழகமும் புலம்பெயர் சமூகமும் ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்திற்காக ஒருமித்த குரலில் இனிவருங்காலத்திற் செயற்பட வேண்டும்.** *தமிழ்நாட்டின் அரசியற் கட்சிகளும் மக்கள் இயக்கங்களும் தமது அரசியல் மற்றும் கொள்கைசார் வேறுபாடுகளுக்கு அப்பால், 2009 இற்குப் பின்னரான ஈழத்தமிழர் விடுதலை அரசியலுக்கு ஒருமுகமாக ஆதரவு வழங்க முன்வரவேண்டும். அதேபோல, தமிழ்நாட்டில் காணப்படும் தேர்தல் சார் அரசியற் பிளவுகளுக்குள் ஈழத் தமிழ்ப் புலம்பெயர் மக்கள் தலையீடுகளை மேற்கொள்ளாது, அனைத்துத் தரப்புகளதும் ஆதரவு ஈழத்தமிழர் உரிமைப் போராட்டத்தை நோக்கிக் குவியப்படுவதற்கு ஏதுவாகத் தமது தொடர்புகளைப் பேணவேண்டும் என்றும் இந்த மாநாடு புலம்பெயர் ஈழத்தமிழர்களை வேண்டிக்கொள்கிறது.*

**இத் தீர்மானங்கள் தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பின் அனைத்து மாவட்டப் பிரதிநிதிகளோடும் கலந்துரையாடி 12 மார்ச் 2022 ஆம் நாளன்று நடைபெறும் மாநிலம் தழுவிய மாநாட்டில் நிறை வேற்றப்படுகின்றன.**



எண் 300/183 தம்பு தெரு, சென்னை - 600001
தொலைபேசி எண் : 099442 65638, 09944116274

Email ; maanavarkoottmaippu@gmail.com